ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2286/08 - 2022 ජුනි මස 27 වැනි සඳුදා - 2022.06.27

*2286/08 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ - 21/ 1978* (x) (ஆ)

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் அ. தொ. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், லங்கா பிஸ்டெக் இன்ஸ்டிடியுட் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 78இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, பதிவிலக்கம்* PV *109910 ஐக் கொண்டதும் தற்போது 278, ஹைலெவல் வீதி, மஹரகம என்னுமிடத்தில் அமைந்துள்ளதுமான 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், இதற்கான* I *ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்ககமைய, இதற்கான* II *ஆம் அட்டவணையின் நிரல்* I *இல் குறித்துரைக்கப்பட்ட பட்டம் வழங்குவதற்கு இட்டுச் செல்கின்றதும் இதன்கண் உயர் கல்வியை விருத்தி செய்யும் நோக்கத்திற்காக பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக லங்கா பிஸ்டெக் இன்ஸ்டிடியுட் (பிறைவேட்) லிமிட்டெட்டை இக்கட்டளை மூலம் ஏற்றங்கீகரிக்கின்றேன். அதன் சுருக்கீடு இதற்கான* II *ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ளது :-*

**அட்டவணை I**

1. லங்கா பிஸ்டெக் இன்ஸ்டிடியுட் (பிறைவேட்) லிமிட்டெட் (இதனகத்துப் பின்னர் “நிறுவனம்” எனக் குறிப்பிடப்படும்) மென்பொருள் பொறியியலில் இளங்கலை விஞ்ஞானமானி (கௌரவப் பட்டம்) தொடர்பாக இங்குள்ள அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்படிப்புக்கு தொடர்புடைய பட்டப்படிப்புத் திட்டத்திற்கு மாணவர்களைச் சேர்க்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளாக :

   (அ) பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக விஞ்ஞான பாடப்பிரிவில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது

   (ஆ) பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் பாடப்பிரிவில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இணைப்பு கற்கை நெறிமூலமான சமமான தகைமை.

2. இக்கட்டளை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் ஒருமுறை குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையினால் நடாத்தப்படும் பாடம், பாட மறுமதிப்பீட்டிற்கு உட்பட்டு, இங்கு அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பட்டத்தை நிறுவனம் வழங்கும்.

3. இந்நிறுவனம், இங்குள்ள அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பட்டப்படிப்பு தொடர்பான பட்டப்படிப்பை இல. 278, ஹைலெவல் வீதி, மஹரகம, இலங்கையில் மட்டுமே நடத்த வேண்டும்.

4. நிறுவனம், இக்கட்டளை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐந்து (5) ஆண்டுகளுக்குள், குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட இடத்தில், இக்கட்டளையின் கீழ் பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட விரும்பும் நிறுவனம் நிறுவப்பட்டதற்கான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

5. நிறுவனம் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கைச் சட்டத்தின் முதலீட்டுச் சபை (இதனகத்துப் பின்னர் BOI எனக் குறிப்பிடப்படுகின்றது) இனால் நிறுவப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடனான தற்போதைய உடன்படிக்கைக்கு ஒரு துணை உடன்படிக்கையை நிறுவனம் மேற்கொள்ளும். முன்மொழியப்பட்ட முதலீட்டிற்கு இணங்க முதலீட்டு ஓட்டம், நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் அத்தகைய நிபந்தனைகளுடனான இணக்கம் ஆகியவற்றைக் கண்காணிக்க BOI இற்கு அதிகாரம் உள்ளது.

**அட்டவணை II**

| “நிரல் I<br>பட்டங்கள் | நிரல் II<br>பட்டங்களுக்கான சுருக்கப் பெயர் |
|---|---|
| மென்பொருள் பொறியியலில் இளங்கலை விஞ்ஞானமானி (கௌரப்பட்டம்) | பீ.எஸ்.சி. கௌரவ (மென்பொருள் பொறியியல் |

**அ. தொ. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2022, யூன் 23.*

EOG *06-0208*